2014 பிப்ரவரி 18]

என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். அங்கு பேச்சிப்பாறையில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் இருக்கின்றது. அதனை நன்கு develop செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரின் கோரிக்கை குறித்து முழுமையாக ஆராய்ந்து அதுபற்றி பின்னர் முடிவெடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

68—

புதிய கட்டடம்

***3922—திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, கவுண்டம்பாளையத்திலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கவுண்டம்பாளையம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தின் திறன்மிகு பயிற்சி மையத்திற்கென ரூ.16 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும்,

இத்தொழிற்பயிற்சி நிலையத்தில் பழைய கட்டடங்களை புதுப்பித்து பராமரிப்புப் பணி செய்வதற்காக ரூ.62.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டு, பொதுப் பணித் துறைமூலம் அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்பத்தை உலகத்தில் எழுப்பி வழி நடத்தும் நாளைய பாரதத்தின் ஒளிவிளக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்குகிறேன். நான் வெற்றி பெற்றவுடனே என்னுடைய கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு சென்று அங்கே படித்துக்கொண்டிருக்கின்ற மாணவச் செல்வங்களை நேரடியாகக் கண்டபோது, கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு எதையும் செய்யவில்லை என்று கூறினார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றவுடன், அந்த மாணவச் செல்வங்களுக்காக சுமார் 1 கோடியே 25 இலட்சம் ரூபாயை ஒதுக்கி, புதிய கட்டடங்கள் கட்டித் தந்து, பழைய பகுதிகளையெல்லாம் மாற்றித் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

அதுமட்டுமல்லாமல், அங்கே படித்துக்கொண்டிருக்கிற மாணவச் செல்வங்கள் அரசுப் பள்ளியிலே படிக்கின்ற மாணவச் செல்வங்களைப் போல எங்களுக்கும் மடிக்கணினி வேண்டும்; எங்களுக்கும் மிதிவண்டி வேண்டும் என்று ஒரு கோரிக்கையை புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே வைத்தார்கள். அங்கே 1,130 மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் அனைவருக்கும் விலையில்லா மடிக்கணினி வழங்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். ஆகவே, மாணவச் செல்வங்கள் சார்பாக நான் கோடானு கோடி நன்றியை சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதுமட்டுமல்லாமல், அங்கே பயில்கின்ற மாணவர்களுக்கு

2014 பிப்ரவரி 18]

விலையில்லா மிதிவண்டி, விலையில்லா சீருடை, அதைத் தைப்பதற்கு தையல் கூலி 300 ரூபாயை ஒதுக்கித் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மாணவச் செல்வங்களின் சார்பாக மீண்டும் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், அவர்களுக்கு மாதம் 500 ரூபாய் உதவித் தொகையும் வழங்க புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மேலும், அங்கே பிற்படுத்தப்பட்ட மாணவச் செல்வங்கள் 100 பேர் படித்துக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கும் இந்த உதவித் தொகையைத் தந்திருக்கிறார்கள். மேலும் ரூபாய் ஒரு கோடியே 60 இலட்சம் செலவில் ஒரு கட்டடத்தைக் கட்ட உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, மாணவச் செல்வங்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் என்னுடைய தொகுதிக்குட்பட்ட ஆனைக்கட்டி அருகில் மலைவாழ் பகுதியிலே வசிக்கின்ற மாணவச் செல்வங்கள் படிப்பதற்காக அரசு தொழில்நுட்பக் கல்லூரி கட்டுவதற்காக 6 கோடியே 70 இலட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி, இதுசம்பந்தமாக கேள்வி கேட்டவுடனே நிதி ஒதுக்கித் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அரசு தொழிற்பயிற்சி மையத்திற்கு அருகில் அரசு வேலைவாய்ப்பு அலுவலகம் உள்ளது. அந்தக் கட்டடமும் பழுதடைந்துள்ளது. அந்தப் பள்ளிக்கும் சுற்றுச்சுவர் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஆய்வு செய்யப்பட வேண்டியிருந்தாலும், அவருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியை ஒதுக்கினால் உடனடியாக அந்தச் சுற்றுச்சுவர் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 பிப்ரவரி 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி குறைவாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. கணேசன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

69—

உயர்மட்டப் பாலம்

*6459—**திரு. பா. கணேசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் தொகுதி, ஒரக்காட்டுப்பேட்டை அருகில் பாலாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

உத்திரமேரூர் தொகுதி, ஒரக்காட்டுப்பேட்டை அருகில் பாலாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. கணேசன் அவர்கள்.*